**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 824/2023**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.விஜயகுமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 6th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் குடிமைப்பணி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18.09.2022-ம் தேதி தென்காசி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்த போது, இரவு 08.10 மணியளவில் 36 வயது மதிக்கத்தக்க முருகன் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவரை விசாரித்தபோது, அடையாளம் தெரிந்த ஒரு நபர் 18.09.2022 ம் தேதி, மாலை 05.00 மணியளவில் சாமி என்பவரின் வீட்டில் வைத்து கத்தியால் தாக்கப்பட்டு காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). அவருக்கு இடது பக்க நெற்றியில் 3 x 1 x 0.5 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

(2). இடது தோள்பட்டையில் 2 x 1 x 1 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகும்.

அன்றைய தினம், இரவு 08.15 மணியளவில் 32 வயது மதிக்கத்தக்க சாஸ்தா என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவரை விசாரித்தபோது, அடையாளம் தெரிந்த ஒரு நபர் 18.09.2022 ம் தேதி, மாலை 05.00 மணியளவில் சாமி என்பவரின் வீட்டில் வைத்து கத்தியால் தாக்கப்பட்டு காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. (1). அவரது வலது பக்க நெஞ்சில் 3 x 1 x 1 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அதற்கு கீழே கன்றிய காயம் காணப்பட்டது.

(2). அவருக்கு நாடியில் 3 x 1 x 0.5 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு சீ.டி.ஸ்கேன் நெஞ்சுப்பகுதியில் எடுக்கப்பட்டது. அதில் நெஞ்சு கூட்டிற்கு உள்ளே, நுரையீரலுக்கு வெளியே காற்று புகுந்து காணப்பட்டது. அவரது நெஞ்சில் உள்ள சதைகளிலும் காற்று புகுந்து காணப்பட்டது. அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் 23.09.2022 அன்று சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆகும். காயம்பட்ட இருவருக்கும் கத்திரிக்கோலால் தாக்கும் போது மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> – இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:49:38 +0530